**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

முன்னிலை **திரு.பா.சரவணன், பி.எஸ்.சி., பி.எல்.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 13 ஆம் நாள் திங்கட்கிழமை

**இடைநிலை மனு எண்கள்.3/2026 மற்றும் 4/2026 ல்**

**அசல் வழக்கு எண்.42/2021**

T.ராஜா,
த/பெ.தங்கராசு,
T4, 3 வது தளம்,
விநாயகர் பிளாக்,
தாதாசாரியார் கார்டன்,
மாம்பழச்சாலை,
திருச்சி. ... மனுதாரர் /வாதி

/எதிர் /

P.சந்திரசேகர்,
த/பெ. பூவார்,
எண்.62, வடக்கு ஈச்சம்பட்டி,
இனாம்கல்பாளையம் அஞ்சல்,
மண்ணச்சநல்லூர்,
திருச்சி மாவட்டம். ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுக்களானது, கடந்த 02.07.2026 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. K.பிரபாகர் அவர்களும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. L.ரெங்கராஜன் அவர்களும், முன்னிலையாகியும், மனுவை நடத்த, மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாத பிரதிவாதங்களை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

## பொதுவான உத்தரவு

1) மனுதாரர்/வாதி தரப்பில், இ.ம.எண்.3/2026 மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன் கீழ், அசல் வழக்கை மறுதிறவு (Re–open) செய்ய அனுமதிக்கக் கோரியும், இ.ம.எண்.4/2026 வகுமுறை 7 விதி 14 மற்றும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன் காலதாமதமாக தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதிக்கக் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த இரண்டு மனுக்களிலும் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை பொதுவானது என்பதால், அவை பொதுவாக விசாரிக்கப்பட்டு, பொதுவான உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

2) மனுதாரர்/வாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், மனுக்களில் உள்ள விவரத்தையே விவரித்து கூறி, அசல் வழக்கானது, 13.02.2018ம் தேதியிட்ட கிரைய உடன்படிக்கையின்படி, ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 19.03.2018ம் தேதியில் வாதி மற்றும் பிரதிவாதிக்கிடையே கிரைய ஒப்பந்த நடைமுறைகளை முடிக்க ஒப்புக்கொண்டிருந்ததாகவும், ஆனால், விவசாய நிலங்களை வீட்டு மனைகளாகப் பதிவு செய்ய பல்வேறு துறைகளிடமிருந்து அனுமதி பெறக்கோரும் அரசாணையின் காரணமாக, கிரைய உடன்படிக்கை முடிப்பதில் தாமதம் ஏற்பட்டதாகவும், மேலும், தாவாசொத்தின் சுவாதீனமும், அசல் கிரைய பத்திரங்களும் பிரதிவாதியால், வாதியிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன என்றும்,

அசல் வழக்கானது வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக நிலுவையிலுள்ள நிலையில், மனுதாரர் தரப்பை நிரூபிக்கும் ஆவணமான தன்னுடைய திருமலை கார்ஸ் என்ற நிறுவனத்தின் டெலிவரி நோட்டுகளை கூடுதல் ஆவணமாக குறியீடு செய்வதற்காக வழக்கை மறுதிறவு செய்யக் கோரியும், வழக்கின் முறையான தீப்புக்கு மேற்படி ஆவணங்கள் தாக்கல் செய்வது மிகவும் அவசியமானவை என்றும், எனவே, வாதி தரப்பு விசாரணையை மேற்கொள்ள வழக்கை மறுதிறவு (Re–Open) செய்து, வா.சா.1 ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்து, கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்வதற்கு அனுமதியளிக்கும்படி இந்த மனுக்களை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, மேற்படி மனுக்களை அனுமதிக்க வேண்டுமென்றும் வாதிட்டார்.

3) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இந்த மனு நிலைக்கதக்கதல்ல என்றும், மனுதாரர் தாக்கல் செய்ய கோரும் திருமலை கார்ஸ் நிறுவனத்தின் டெலிவரி நோட்டுகள் வாதி அவருக்கு சாதகமாக உருவாக்கிக் கொண்ட ஆவணங்கள் என்றும், அசல் வழக்கானது குறுக்கு விசாரணைக்காக நிலுவையிலுள்ள நிலையில், இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படும் ஆவணங்கள் அசல் வழக்கிற்கு சம்மந்தமில்லாதவை என்றும், அசல் வழக்கை இழுத்தடிக்கும் நோக்கில் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும், எனவே, இந்த மனுக்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

4) இந்த இரு மனுக்களிலும், பரிசீலிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்த மனுக்கள் அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.

5) இருதரப்பு கருத்துகளும், வழக்காவணங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது 13.02.2018 ம் தேதியிட்ட கிரைய உடன்படிக்கையின்படி, ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இ.ம.எண்.4/2026 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள 7 டெலிவரி நோட்டுகள், அசல் வழக்கிற்கு மனுதாரர் /வாதி தரப்பில் முக்கியமான ஆவணங்கள் என்றும், எனவே, வழக்கை மறுதிறவு செய்து, மேற்படி ஆவணங்களை கூடுதல் ஆவணங்களாக தாக்கல் செய்ய வேண்டி இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளதாகவும் மனுதாரர் /வாதி தரப்பில் கூறப்பட்டுள்ளது.

6) விசாரணை நீதிமன்றத்தில், இருதரப்பினருக்கும் அவர்களது வழக்கை நிரூபிக்க உரிய வாய்ப்பு வழங்க வேண்டியது அவசியமாகிறது, எனவே, அசல் வழக்கில், மனுதாரர்/வாதி தரப்பை நிரூபணம் செய்ய, அவரது தரப்பில் கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்ய, ஒரு வாய்ப்பு வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேற்படி கூடுதல் ஆவணங்களின் உண்மைதன்மை, கட்டுப்படுத்தும் தன்மை தொடர்பாக அசல் வழக்கின் இறுதியில் தான் தீர்மானிக்க முடியும். எனினும், முதல் விசாரணை

முடிந்த பிறகு, மீண்டும் வழக்கை மறுதிறவு செய்ய கோரியுள்ளதால், இந்த மனுக்கள் பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு அனுமதிக்கத்தக்கதென முடிவு செய்யப்படுகிறது,

7) **முடிவாக,**

இந்த 2 மனுக்களும் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதிக்கப்படுகிறது,

1) மனுதாரர்/வாதி இந்த இ.ம.எண்.3/2026 வின், செலவு தொகையாக **ரூ.1000/−ஐ** (ரூபாய் ஆயிரம் மட்டும்) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்புக்கு **20.07.2026−**க்குள் செலுத்தும்பட்சத்தில், இந்த மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் இந்த மனு தானாக தள்ளுபடியாகும் என்று உத்தரவிடப்படுகிறது.

2) அவ்வாறு மேற்படி செலவுத்தொகை செலுத்தி, மேற்படி இ.ம.எண்.3/2026 மனு அனுமதிக்கப்படும் நிலையில், அதன் தொடர்ச்சியாக, இ.ம.எண்.4/2026 மனுவும் அனுமதிக்கப்படும் என்றும், அதில் குறிப்பிட்டுள்ள கூடுதல் ஆவணங்கள், அவற்றின் உண்மைதன்மை மற்றும் தரப்பினர்களை கட்டுப்படுத்தும் தன்மைக்கு உட்பட்டு, பிரதிவாதி தரப்பு ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்ய அனுமதிக்கப்படுமெனவும், அந்த ஆவணங்களின் ஏற்கும் தன்மை பற்றி வழக்கின் இறுதியில் தீர்மானிக்கப்படுமென்றும் முடிவு செய்யப்படுகிறது.

3) மீண்டும் அழைக்க வாய்தா **20.07.2026.**

இந்த பொதுவான உத்தரவு, என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்தபின், என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 13 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SARAVANAN B

Digitally signed by SARAVANAN B
Date: 2026.07.13 13:57:42 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**

மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை.

SARAVANAN B

Digitally signed by SARAVANAN B
Date: 2026.07.13 13:57:46 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**